**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 20.07.2026</u>**

**OS.178/2022**

**வா.சா.2 திரு.பன்னீர்செல்வம்**

**வா.சா.2 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் தற்போது என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். நான் பைனான்ஸ் தொழில் 4 வருடம் பார்த்து வந்துள்ளேனா என்றால் இல்லை, என்னுடைய தொழிலே விவசாயம்தான். இந்த வழக்கின் வாதி நவீன் குமாரை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் அதனால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியுமா, அதனை நான் படித்துபார்த்துதான் கையொப்பம் செய்தேனா என்றால் நன்கு தெரியும், படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். இந்தவழக்கில் உள்ள ஒப்பந்த பத்திரம் எந்த தேதியில் செய்தது என்றால் தேதி தெரியவில்லை, 5, 6 வருடத்திற்கு முன்பு செய்யப்பட்டது. ஒப்பந்த பத்திரத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஆமாம். அந்த ஒப்பந்த பத்திரத்தில் உள்ள முழுமையான சங்கதிகள் மற்றும் அதில் உள்ள சொத்து விவரம் தெரியுமா என்றால் முழுமையாக தெரியும், சொத்து விவரமும் தெரியும்.

2. ஒப்பந்த பத்திரத்திரம் எழுதும் போது நான் உடன் இருந்தேனா என்றால் நான் உடன் இருந்தேன். எவ்வளவு தொகைக்கு ஒப்பந்தம்

போடப்பட்டது என்றால் ரூ.4,25,000/−க்கு பேசப்பட்டு அன்றைய தினமே ரூ.4,00,000/− அட்வான்சாக கொடுக்கப்பட்டது. பாக்கி ரூ.25,000/−ம் அன்றைய தேதியிலேயே கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, அதை கொடுக்க 2 வருடம் வாய்தா போடப்பட்டது. அந்த ரூ.25,000/−ம் பணம் ஒப்பந்தம் போட்ட தேதியில் நவின்குமாரால் கொடுக்க முடியவில்லை என்பதற்காகதான் அன்றைய தேதியில் வாய்தா போடப்பட்டது என்றால் அன்றைய தேதியில் நவீன்குமாரிடம் ரூ.25,000/−ம் பணம் இருந்தது ஆனால் கிரையம் செய்துகொடுக்க வேண்டிய காஞ்சனாதான் 2 வருடம் வாய்தா கேட்டார், அவ்வாறு கேட்டதற்கு காரணம் அவர் குடும்ப சூழ்நிலை சரியில்லை, அவர் கிரையம் செய்து கொடுக்க 2 வருடம் வேண்டும் என்று கேட்டதால்தான் ஒப்பந்த பத்திரத்தில் 2 வருடம் வாய்தா போடப்பட்டது. வாய்தா நீட்டிப்பு பத்திரத்திலும் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வாய்தா நீட்டிப்பு ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ.8 ஆனது நவீன்குமாரால் ரூ.25,000/− ஏற்பாடு செய்து கிரயம் செய்து கொள்ள முடியாத காரணத்தால்தான் வாய்தா நீட்டிப்பு செய்ததாக அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு அந்த பத்திரத்தில் இல்லை, நவீன்குமாரிடம் எப்போதும் ரூ.25,000/−ம் பணம் இருந்தது. ரூ.25,000/− பணம் நவீன்குமாரிடம் இருந்தது என்று சொல்லும்போது அந்த பணத்தை நீதிமன்றத்தில் நவீன்குமார் வைப்பீடு செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

3. ஒப்பந்த பத்திரத்தில் உள்ள சொத்தின் மதிப்பு தற்போது எவ்வளவு இருக்கும் என்றால் அது எனக்கு தெரியவில்லை. கிரையம் பேசப்பட்ட காலத்தில் அந்த சொத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் பேசப்பட்டது ரூ.4,25,000க்கு அதன் மதிப்பு குறித்து எனக்கு தெரியவில்லை. நவீன்குமாருக்கு கிரையம் பேசப்பட்டதாக சொல்லும்போது நான் தான் முன்நின்று வில்லங்கம் பார்த்து கொடுத்தேன் அந்த சொத்தின் மதிப்பு குறித்து எனக்கு நன்கு தெரியும் ஆனால் வழக்கிற்காக வேண்டி தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது தாவாசொத்தின் மதிப்பு ரூ.30,00,000/-க்கு மேல் இருக்கும், அந்த சொத்தை அடைவதற்காக வேண்டிகடனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை வைத்து இந்த வழக்கு தாக்கல் செய்து அதில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு கடனுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்பதால்தான் என்முன்னிலையில் காஞ்சனா ரூ.90,000/-த்தை காசோலை மூலம் நவீன்குமாருக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் இந்தவழக்கின் முழு சங்கதிகளையும் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.07.20 17:23:47 +0530